சார்பு நீதிமன்றம், விருதுநகர்

M.C.O.P.No: 91/2020 Date: 02.11.2023

மனுதாரரின் தரப்பு சாட்சி(Pw2) வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திரு.M.ஆறுமுகம், கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணன் | சாதி | : | |
| த/பெ | : பூச்சி | சமயம் | : | |
| கிராமம் | : குராயூர் | தொழில் | : | |
| தாலுகா | : கள்ளிக்குடி | வயது | : | 58 |

முதல் விசாரணை –

இம்மனுவில் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். எனது ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் **ம.சா.ஆ.23**(அசலுடன் ஒப்பிடப்பட்டது). மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நானும், மனுதாரும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள். மனுதாரர் எனக்கு உறவினர் அல்ல, பழக்கத்தின் அடிப்படையில் மருமகன் உறவு முறை. நான் சொந்தமாக விவசாயம் செய்து வருகிறேன். நான் வழக்கமாக காலை 8.30 மணிக்கு வேலைக்கு சென்று விட்டு 5.00 மணிக்கு திரும்பி வருவேன். தங்கபாண்டி டீக்கடை சம்பவ இடத்தில் இருந்து சுமார் 35 அடி

தூரம் இருக்கும். டீக்கடையானது கிழக்கு உள்ள சர்வீஸ் சாலையை தாண்டி உள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டில் தெருவிளக்குகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் தங்கபாண்டி டீக்கடை இல்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.3 ல் தங்கபாண்டி டீக்கடை காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த இடமானது கிழக்கு பக்கம் உள்ள பிரதான சாலை என்றால் சரிதான். நான் விபத்தை பார்க்க வேண்டும் என்றால் கிழக்கு பக்கம் அப்பால் உள்ள சர்வீஸ் ரோட்டில் இருந்து தான் பார்க்கமுடியும் என்றால் சரிதான். டீக்குடித்து கொண்டிருந்த நான் சத்தம் கேட்டு தான் திரும்பி பார்த்தேன் என்று சொன்னால் சரிதான். சம்பவ நடந்த நேரம் இரவு 10 மணி என்பதால் நான் சொன்னது போல் நான் இருந்த இடத்தில் இருந்து சம்பவத்தை பார்த்து இருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் காயம் அடைந்த மனுதாரர் எனது உறவினர் மற்றும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.